**மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேர்வு வழிகாட்டுதல்கள்**

**நான்காம் மற்றும் மூன்றாம் ஆண்டு அரையாண்டு இறுதித் தேர்வு – அரையாண்டு 2 – 2020/2021**

**கலைப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்** தேர்வு

தேர்வுக்கு முன்

- அனைத்து 4ஆம் ஆண்டு மற்றும் 3ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளி மாணவர்களும் நிகழ்நிலையில் தேர்வு எழுத வேண்டும்.
- அனைத்து 4 ஆம் ஆண்டு மற்றும் 3 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தங்கள் விடைத்தாள்களை சமர்ப்பிக்க ஒரு வாரம் அவகாசம் வழங்கப்படும். உதாரணமாக, உங்களுக்கு 21 மே 2022 அன்று தேர்வு நடாத்தப்பட்டால், 28 மே 2022 க்கு முன் ஏதாவது ஒரு நாளில் அதைச் சமர்ப்பிக்கவேண்டும்.

தேர்வின் போது

- மாணவர்கள் தங்கள் சேர்க்கை அட்டையை SIS கணக்கிலிருந்து பதிவிறக்கம் செய்து, அதை மென்நகல் மற்றும் கடினநகலாக சேமித்துவைத்திருக்க வேண்டும்.
- அனைத்து 4 ஆம் ஆண்டு மற்றும் 3 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்கள் விடைத்தாள்களை சமர்ப்பிக்க ஒரு வாரம் அவகாசம் வழங்கப்படும். இந்த வாரத்திற்குள் அவர்கள் தங்கள் விடைத்தாள்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது:
    - 3ஆம் ஆண்டு - exam3@arts.cmb.ac.lk
    - 4ஆம் ஆண்டு - exam4@arts.cmb.ac.lk
- 4 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு, ஒரு நாளைக்கு ஒரு அமர்வாக (காலை அமர்வு) தேர்வுகள் நடாத்தப்படும், ஆனால் 3 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு, ஒரு நாளைக்கு இரண்டு அமர்வுகளாக தேர்வுகள் (காலை மற்றும் பிற்பகல் அமர்வுகள்) நடைபெறும்.
    - காலை அமர்வு: காலை 6.00 முதல் 10.00 வரை
    - பிற்பகல் அமர்வு: பி.ப 2.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரை
- வினாத்தாள்களை காலை அமர்வுக்காக காலை 6.00 மணி முதலும், பிற்பகல் அமர்வுக்காக பிற்பகல் 2.00 மணி முதலும் LMS இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
- கையால் எழுதுவதற்குப் பதிலாக விடைகளைத் தட்டச்சு செய்ய விரும்பும் மாணவர்கள் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.
- மாணவர்கள் தங்கள் பதில்களை எழுத பிரெய்ல் ரைட்டர்/ஸ்லேட்டைப் (braille writer/slate) பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அவர்கள் தேர்வுகளில் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் இன்னொருவரிடமிருந்து உதவி பெற வேண்டும்.

விடைத்தாள்களை சமர்ப்பித்தல்

- மாணவர்கள் தங்களின் விடைத்தாள்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அவர்களின் பாடக் குறியீடு மற்றும் சுட்டெண் என்பவற்றை மின்னஞ்சலின் தலைப்பு வரியில் குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்ய வேண்டும்.
    - 3ஆம் ஆண்டு - exam3@arts.cmb.ac.lk
    - 4ஆம் ஆண்டு - exam4@arts.cmb.ac.lk
- நீங்கள் விடைத்தாள்களை மின்னஞ்சலில் அனுப்பும்போது, பின்வரும் வடிவமைப்பில் தலைப்பு வரியில் விவரங்களைச் செருக வேண்டும் - [பாட குறியீடு] [சுட்டெண்] [கூடுதல் நேரம்].

உதாரணமாக: INR 1111 A12345 கூடுதல் நேரம்

- மாணவர்கள் தங்களுடைய விடைத்தாள் நகலுடன் தங்கள் அனுமதி அட்டையின் நகலை பதிவேற்றவோ/மின்னஞ்சல மூலம் அனுப்பவோ வேண்டும். பதிவேற்றம் செய்யப்பட்ட/மின்னஞ்சலில் அனுப்பப்பட்ட அனுமதி அட்டையானது, சம்பந்தப்பட்ட பாடப்பிரிவுடன் தொடர்புடைய ஒவ்வொரு கூண்டிலும் பரீட்சாத்தியின் கையொப்பத்தை தெளிவாகக் கொண்டிருக்கவேண்டும்.
- அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் LMS இல் கொடுக்கப்பட்ட இணைப்பு 1 இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரகடனப்/உறுதிப் படிவம்/பொது முகப்புப் பக்கத்தை நிரப்பி, விடைத்தாள்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.